RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சுழலில் மிதக்கும் தீபங்கள் நாவலில் பெண்ணியமும் குடும்பச் சிக்கல்களும்

ஜோ. சந்தோஷ் சிவன் [அ *]

[அ] தமிழ்த்துறை, கலையியல் மற்றும் அறிவியல் புலம், எஸ். ஆர். எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு - 603 203,

# Feminism and Domestic Issues in Rajam Krishnan’s Novel Suzhalil Midhakkum Dheepangal

J. Santhosh Sivan [a, *]

[a] Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattankulathur, Chengalpattu – 603 203

*Corresponding Author: jsanthoshsivanjsanthoshsivan@gmail.com

Received: 03-12-2025
Revised: 26-02-2026
Accepted: 12-03-2026
Published: 17-03-2026

Check for updates

## ABSTRACT

Rajam Krishnan is a widely acclaimed writer in modern Tamil literature. The primary objective of this research paper is to analyze her novel 'Suzhalil Midhakkum Deepangal' through the lens of feminist theories.The study highlights Rajam Krishnan's vivid portrayal of the systemic oppression faced by women within the domestic sphere. A significant focus of this research is the examination of how, despite years of marriage and being a part of the husband’s household, a woman is often subjected to character assassination and sexual slander for even the slightest perceived mistake. This paper delves into these societal prejudices and the vulnerability of women as depicted in the novel.

**Keywords:** Feminism, Charlotte Bunch, Rajam Krishnan, Domestic Issues

## முன்னுரை

தமிழ்ப் படைப்புலகத்தில், பெண்ணிய எழுத்தாளர்களின் முன்னத்தி ஏராகத் திகழ்பவர் ராஜம் கிருஷ்ணன். நவீனத் தமிழ்ப் புனைவுகளில் பலரும் பெண்ணியம் குறித்தும், பெண் விடுதலை குறித்தும் எழுதியுள்ளனர். தமிழ் இலக்கியப் பரப்பில் எல்லாக் காலகட்டங்களிலும் பெண் படைப்பாளர்கள் இயங்கி வந்துள்ளனர். சங்க இலக்கியத்தில்கூடப் பெண்பாற் புலவர்கள் பலரும் தங்களின் எழுத்துகளைப் பதிவு செய்துள்ளனர். ஔவையாரையும், வெள்ளிவீதியாரையும் நாம் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். அதன் தொடர்ச்சியாகப் பக்தி இலக்கியக் காலகட்டத்தில் ஆண்டாள் நாச்சியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்கள் பெண்ணியப் படைப்பாளர்களாகத் திகழ்ந்தனர்.

காலனியக் காலகட்டத்தில், அதாவது இந்திய விடுதலைக்கு முன்பே சரஸ்வதி அம்மாள், ராஜாத்தியம்மாள், பண்டிதை விசாலாட்சி அம்மாள், தேவக்குஞ்சரி அம்மாள், கௌரி அம்மாள், வை.மு. கோதைநாயகி, சேது அம்மாள் போன்ற பெண் படைப்பாளர்கள் பெண்களை மையப்படுத்தி எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து, பிற்காலனியக் காலத்தில் குமுதினி, லட்சுமி, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் பெண் படைப்பாளர்களாக அறியப்படுகிறார்கள். இவர்களுள், அனைவரும் குறிப்பிடும்படியாக ராஜம் கிருஷ்ணனின் படைப்புகள் அமைந்துள்ளன. நவீன இலக்கிய வடிவமான புதினம், சிறுகதை, கட்டுரை முதலியவற்றில் ராஜம் கிருஷ்ணன் தனது ஆளுமையைச் செலுத்தியுள்ளார். அவரின் படைப்புகளைக் குறித்துப் பல ஆய்வுகள் வெளியாகியுள்ளன. அவ்வகையில், ராஜம் கிருஷ்ணனின் ‘சுழலில் மிதக்கும் தீபங்கள்’ எனும் புதினத்தில் குடும்பப் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களை பெண்ணியக் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு ஆய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## பெண்ணியம் - ஓர் அறிமுகம்

மேற்கத்திய நாடுகளில் கி.பி. 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், பெண்ணியக் கலகக் குரல்கள் ஆங்காங்கே எழுந்தன எனலாம். அக்குரல்கள் அத்தோடு நின்றுவிடாமல், சில பெண்ணியவாதிகள் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு, சமூகத்தில் பெண்ணியத்தை ஓர் இயக்கமாகவும், கல்விப்புலம் சார்ந்தும் முன்னெடுத்தார்கள். மேலும், பெண்ணியம் இன்று மேற்குலகக் கல்விப்புலத்தில் தனிப்பெரும் துறையாகச் செயல்படுகிறது. பெண்ணியம் குறித்தும், அதன் தத்துவங்கள் குறித்தும் பல பெண்ணியவாதிகள் கருத்துகளை எடுத்துரைத்துள்ளனர். அவர்களுள் ஒருசிலரின் கருத்துகளை இங்கே காணலாம்.

மேற்கத்திய பெண்ணியவாதி சார்லட் பன்ச் (Charlotte Bunch) பெண்ணியம் குறித்துப் பின்வருமாறு விளக்கம் அளிக்கிறார்:

“பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல; சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்”. (பிரேமா, பெ.ப. 3).

அதாவது, இவர் பெண்ணியத்தை, 'சமூக நிலை மாற்றக் கோட்பாடு' (Transformational Politics of the Society) என்று விளக்குகிறார். அதைப்போலவே தெரசா பில்லிங்டன் (Teresa Billington) எனும் பெண்ணியச் சிந்தனையாளர்,

“பெண்ணியம் உலகையே மாற்றியமைக்கும் இயக்கம்” என்று கருத்துரைக்கிறார் (பிரேமா, பெ.ப. 4)

இவ்விரு பெண்ணியவாதிகளின் கூற்றுகளைக் கவனிக்கும்போது, பெண்ணியம் எனும் கோட்பாடு உலகை மாற்றும் சிந்தனையாகவும், செயலாகவும் இருக்கிறது என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை என்பது புலனாகிறது.

## இந்தியாவில் பெண்ணியக் கருத்துகள்

மேற்கில் தோன்றிய பெண்ணியக் கருத்துகள் ஆங்கில நாளேடுகள் மற்றும் இலக்கியங்கள் வழியாக இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பரவின. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே, அடிமைப்பட்டிருக்கும் பெண்களைக் குறித்த படைப்புகள் பல தோன்றின. அதற்குச் சான்றாக ஆ. மாதவையா, ராஜம் ஐயர், மகாகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள் தமிழ்ப் படைப்புலகத்தில் பெண்கல்வி, பெண் சுதந்திரம், விதவை மறுமணம், பால்ய விவாகத் தடை, பெண் சொத்துரிமை போன்றவற்றைத் தம்முடைய படைப்புகளில் வலியுறுத்தினார்கள்.

## ராஜம் கிருஷ்ணனும் பெண்ணியமும்

தமிழ்ப் பெண்ணிய எழுத்தாளர்களில் ராஜம் கிருஷ்ணன் மிக முக்கியமானவர். அவரின் ‘சுழலில் மிதக்கும் தீபங்கள்’ எனும் புதினத்தில் பல்வேறு பெண் விடுதலைச் சிந்தனைகள் காணப்படுகின்றன. முதலில் நாவலின் மையக் கதைக் கருவை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. கிரிஜா என்பவள் ஓர் அரசுப் பள்ளி ஆசிரியை. தனது திருமணத்தை முன்னிட்டு அரசுப் பணியிலிருந்து விலகிக்கொள்கிறாள். டெல்லியில் தனது கணவன் மற்றும் பிள்ளைகளோடு வாழ்ந்து வருகிறாள். அவளுக்குத் தினந்தோறும் இந்தக் குடும்ப வாழ்க்கையில் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அவ்வழுத்தமான சூழலிலிருந்து அவள் எப்படி வெளியேறித் தன்னை மீட்டுக்கொள்கிறாள் என்பதே கதைக்கருவாகப் புனையப்பட்டுள்ளது.

## பெண் உழைப்பு

நாவலின் முதன்மைக் கதாபாத்திரமாக அமைபவள் கிரிஜா. அவளைச் சுற்றித்தான் ராஜம் கிருஷ்ணன் முழுக்கதையையும் நகர்த்துகிறார். கிரிஜாவைச் உயர் மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தவளாகப் படைத்துள்ளார் ஆசிரியர். திருமணத்திற்கு முன்பு, தந்தை மற்றும் சகோதரன் சொற்கேட்டு நடக்கும் ஒரு சராசரிப் பெண்ணாகவே அவள் காட்டப்படுகிறாள். கிரிஜாவால் திருமணத்திற்கு முன்பு சுயமாக முடிவு எடுக்க முடியாத சூழலே இருந்தது. திருமணத்தின்போது பெரிய அளவில் வரதட்சணை கேட்கவில்லை என்றாலும், அவளை வெறும் உழைக்கும் இயந்திரமாகவே கணவனின் குடும்பம் நடத்தியிருக்கிறது. இதுகுறித்து, 'எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்' என்ற நூலில் பேராசிரியர் முனைவர் சு. வேங்கடராமன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“சில உயர் மத்தியதரக் குடும்பங்களில் மட்டும் வரதட்சணை என்று எதுவும் வேண்டாம் என்ற நிலை காட்டப்படினும், ‘கையில் காலில் என்று கேட்கவில்லை; போடுவதைப் போட்டு ஸிம்பிள்

மேரேஜ் பண்ணுங்கள்' என்பதாகப் பேசப்படினும், மண வாழ்வில் பெண்ணை மிகக் கொடுமையாகச் சிதைக்கின்றனர் புகுந்த வீட்டார்." (வேங்கடராமன், எ.த.பு.பெ., பக். 8)

உயர் மத்தியதர வர்க்கத்தில் பெண்கள் நன்கு படித்திருந்தாலும், அப்பெண்களைச் சமையலறையில் முடக்கி வைத்திருக்கிறார்கள் என்பதனை, இப்புதினத்தில் வரும் பின்வரும் உரையாடல்கள் தெளிவுபடுத்துகிறது:

"உங்க அறிவு, உங்க திறமை எல்லாம் இந்தச் சமையலறைச் சேவகத்தில் முடங்கி இருக்கே கிரி, ஆர் யூ ஹேப்பி வித் இட்? ..." (ராஜம் கிருஷ்ணன், சு.மி.தீ., பக். 18).

## குடும்பச் சிதைவுகள்

இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் இணையாக வாழும்போதும், கணவன் மற்றும் அவனின் குடும்ப உறுப்பினர்கள் மனைவியை மரியாதையுடன் நடத்தினால் மட்டுமே குடும்பம் சிதையாமல் இருக்கும். மாறாக, சமமற்ற முறையில் நடத்தினாலோ அல்லது மறைமுகமாகவும் நேரடியாகவும் துன்புறுத்தினாலோ, மனைவியானவள் அந்தக் குடும்பச் சிறையை விட்டு வெளியேறத் துணிவாள்; அல்லது மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவாள். இம்மாதிரியான புனைவுகள் குறிப்பாக 1980-களில் மிகுதியாக வெளியாகின என்று ஆய்வாளர் சு. வேங்கடராமன் குறிப்பிடுகிறார்.

"குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் - கணவனும் மனைவியும் கூடி வாழ்வதாகும். முன்னர் கூட்டுக் குடும்பங்களாக இருந்தவை, இப்போது தனிக் குடும்பங்களாக மாறியுள்ளன. எத்தகைய குடும்பமாயினும் இருவரும் அன்பு செலுத்தி, அனுசரணையாக இருப்பின் பிரச்சினை எழாது. ஆண் தன்னுடைய மேலாதிக்கத்தைக் காட்டுவதாகவும், பெண்ணை அடிமைப்படுத்தியும், துன்புறுத்தியும், இழிவுபடுத்தியும் நடத்தினால் சிக்கல் எழும்" (வேங்கடராமன், எ.த.பு.பெ., பக். 25).

இக்கருத்தினை மெய்ப்பிக்கும் விதமாக, இப்புதினத்தில் கணவனின் கொடுமையான ஒடுக்குமுறைகளைச் சந்திக்கிறாள் கிரிஜா.

"அவள் காலையிலிருந்து இரவு கண் மூடும் வரை யாரை முன்னிட்டு ஆணி அடித்த நிலையில் சுழன்றாளோ, அந்த அவன், அவளைத் துரும்பை விடவும் கேவலமாகக் கருதியிருக்கிறான்" (ராஜம் கிருஷ்ணன், சு.மி.தீ., பக். 42).

தமிழ்ப் சமூகத்தில் கணவனைக் கண்கண்ட தெய்வமாக வணங்கும் வழக்கம் கோவலன் கண்ணகி காலம் முதலே வழக்கத்தில் உள்ளது. கணவன் என்பவன் மனைவியை சக மனுஷியாக மதிக்காத ஆணவச் செருக்கு தொன்று தொட்டு இச்சமூகத்தில் இருந்துள்ளது. இப்புதினத்திலும் கிரிஜாவை அவளது கணவன் ஒரு பொருட்டாகக்கூடக் கருதவில்லை என்பதற்கு மேற்கண்ட உரையாடல் பகுதியே சாட்சியாக இருக்கிறது.

## பாலியல் அரசியலும் அவதூறும்

இப்புதினத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை, ஒரு பெண் என்பவள் குடும்பத்திலும் வெளியிலும் எப்படியெல்லாம் அவமானப்படுத்தப்படுகிறாள் என்பதனை ராஜம் கிருஷ்ணன் விரிவாகப் பதிவு செய்துள்ளார். கிரிஜா தான் அவமானப்படுகிற இடங்களை எல்லாம் முதலில் நிதானமாகப் பொறுத்துக்கொள்கிறாள். ஆனால், கணவனின் செயலால் மனம் வெதும்பி, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் ரிஷிகேஷ் யாத்திரை சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு வரும்போது, அவளை நடத்தைக் கெட்டவளாகப் பேசுகின்றனர் குடும்பத்தினர். அவளுடன் 18 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த கணவனும் அவளின் நடத்தையில் சந்தேகம் கொள்கிறான். இச்செயலை கிரிஜாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"அம்மா வந்துட்டா, கிடைச்சுட்டா, அம்மா கெட்டுப் போகல... அவள் பரத்தின் தலையைத் தடவிக் கொண்டு நிற்கிறாள். எங்கே போயிட்டு வரே?" (மேலது, பக். 85).

இச்சமூகத்தில் ஓர் ஆண் வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் சென்றுவிட்டுத் திரும்பினால், அவன் மீது பாலியல் புகார் எழுவதில்லை. அதேவேளையில், ஒரு பெண் வீட்டில் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வெளியில் சென்றுவிட்டு வரும்போது, அப்பெண்ணின் கற்பு பற்றிய கேள்வியையே இச்சமூகம் எழுப்புகிறது. இத்தகைய இழிவு நிலைக்குக் காரணமான பின்புலத்தைப் பெண்ணிய நோக்கில் காணலாம். சிறுவயதில் இருந்தே பெண்களை 'அடக்க ஒடுக்கமாக' வளர்த்து விடுகிறது இச்சமூகக் கட்டமைப்பு. இப்படிச் சமூகக் கருவிகளால் உருவாக்கப்படும் ஆண்/பெண் என்ற பங்குநிலைகள் (Gender Roles) பெண்களின் தாழ்வு நிலைக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன. இதையே சிமோன் தெ பவார் (Simone de Beauvoir),

“ஒருத்தி பெண்ணாகப் பிறப்பதில்லை; பெண்ணாக உருவாக்கப்படுகிறாள்” (One is not born, but rather becomes, a woman) என்று ஆழமாக வர்ணித்துள்ளதை ஆய்வாளர் பிரேமா சுட்டிக்காட்டுகிறார் (பி.பெ., பக். 46). என்று கூறுகிறார்.

## முடிவுரை

இப்புதினத்தில் கிரிஜா எனும் கதாபாத்திரம் வழியாக, நவீனப் பெண் எப்படிச் சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்பதைப் பகிர்கிறார் ராஜம் கிருஷ்ணன். குறிப்பாகக், கல்வி கற்ற பெண்கள் தங்களை அடிமைப்படுத்தும் எந்தக் குடும்ப அமைப்புக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டிய தேவையில்லை என்பதையே இப்புதினம் வலியுறுத்துகிறது. ராஜம் கிருஷ்ணனின் இந்நாவல் வழியாகப் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளைப் பெண்ணிய நோக்கில் இக்கட்டுரை விரிவாக விவரித்துள்ளது.

## References

Prema R., Penniyam, International Institute of Tamil Studies, Chennai, 1994.

Rajam Krishnan, Penniyam, International Institute of Tamil Studies, Chennai, 1994.

Venkataraman S., Enbathukalil Tamizh Punaikathaikalil Penniyam, International Institute of Tamil Studies, Chennai, 1993.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License